## விருதுநகர் வரைவாளர் இல்ல வரலாறு




2001–ம் ஆண்டு விருதுநகர் பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு பொறியியல் சங்கம் மற்றும் பொறியாளர்கள் சங்கம் சார்பில் அவர்கள் சங்கத்திற்கு அரசிடமிருந்து இடம் ஒதுக்கீடு பெற்று அவர்களது சங்க கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வந்தது. அப்போது நான் **(எஸ்.பவுன்ராஜன், முன்னாள் மாநிலத் தலைவர்)** விருதுநகர் கிளையின் செயலாளராக இருந்தேன். அந்த சமயம் நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் **திரு.எஸ்.வள்ளிநாயகம்** என்னிடம் வந்து நாமும் நமது கிளைச் சங்கத்திற்கு பொதுப்பணித்துறை அலுவலக வாளாகத்தில் இட ஒதுக்கீடு பெற வேண்டும் என தெரிவித்தார்.

அவரது வேண்டுதல் படி அப்போதைய வைப்பாறு வடிநில வட்ட கண்காணிப்புப் பொறியாளர், **திரு.சபாபதி** அவர்களிடம் சங்கத்தின் சார்பாக வேண்டுகோள் விடுத்து நமது கிளைச் சங்கத்திற்கு ஒரு இட ஒதுக்கீடு பெற்றோம். இட ஒதுக்கீடு பெற்ற சில மாதங்கள் கழித்து நமது கிளைச் சங்கம் இட ஒதுக்கீடு பெற்ற இடத்தின் முன்பக்கம் துறை அலுவலர்களுக்கு Cycle Stand கட்டுவதற்கு அப்போதைய இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்ட செயற்பொறியாளர் திரு. K.சக்திவேல் அவர்களால் அளவீடு செய்யப்பட்டு கொண்டிருந்தது.

அந்த சமயம் நான் இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்டக் கோட்டத்தில் இளநிலை வரைதொழில் அலுவலராக பணியாற்றிக் கொண்டிருந்தேன். மேற்கண்ட திட்ட செயற்பொறியாளரிடம் நான் நல்ல மதிப்பை பெற்றிருந்தேன். அதனால் அவரிடம் சென்று தாங்கள் அளவீடு செய்து கொண்டிருக்கும் இடத்திற்கு பின்புறம் நமது சங்கத்திற்கு இட ஒதுக்கீடு பெற்றுள்ள விவரத்தினை தெரிவித்தேன். செயற்பொறியாளர் என் மீது வைத்திருந்த மதிப்பின் காரணமாக Cycle Stand இடத்தை சற்று தள்ளி அளவீடு செய்ததுடன் சங்க கட்டட பணிகளை எப்போது ஆரம்பிக்க உள்ளீர்கள் எனக் கேட்டார்.

அதற்கு நான் தற்சமயம் கிளையில் போதுமான நிதியில்லை என்றும் எனவே, கட்டடம் கட்ட சிறிது காலம் ஆகும் என்றும் தெரிவித்தேன். அதற்கு செயற்பொறியாளர் மேற்கண்ட இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்டப் பணிகளுக்கு

என்னுடைய சிறப்பான பங்களிப்பை நினைவு கூர்ந்ததுடன் கட்டட பணிகளை உடனடியாக துவங்குமாறு அதற்கு அவர் உதவி புரியதாகவும் தெரிவித்தார்.

உடனடியாக நான் கிளைச் சங்க கூட்டத்தை ஏற்பாடு செய்து, மேற்கண்ட விவரத்தை தெரிவித்தேன். மேலும் இது ஒரு நல்ல வாய்ப்பு இதனை பயன்படுத்தி சங்க கட்டடத்தை உடனடியாக கட்ட அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என தெரிவித்தேன். எனது வேண்டுகோளை ஏற்று அனைத்து உறுப்பினர்களும் தாராளமாக நிதி உதவி அளித்தார்கள்.

இருக்கன்குடி நீர்த்தேக்கத்திட்ட செயற்பொறியாளரின் பெருமுயற்சி, மற்றும் நமது சங்க உறுப்பினர்களின் முயற்சியுடனும், மையச் சங்கத்திடமிருந்து எந்த நிதியுதவியும் பெறாமல் விருதுநகர் கிளைக்கு அதுவும் தமிழகத்தில் உள்ள கிளைகளில் மிகவும் சிறிய கிளையான விருதுநகர் கிளைக்கு ஒரு சங்கக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது எனப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் மேற்கண்ட கட்டடத்தை மற்ற கிளை நிதியுதவியுடன் நமது மையச் சங்க தணிக்கையாளர், **திரு.கே.உசிலாமணி** அவர்களால் புனரமைக்கப்பட்டு கிளைச் சங்கம் மற்றும் மையச் சங்க நிர்வாகிகள் வேண்டுகோளுக்கு இணங்க நான் பணியிலிருந்து ஓய்வு பெற்றப் பின்னரும் மீண்டும் 08.10.2022 அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, உறுப்பினர்கள் முயற்சி எடுத்தால் அனைத்து கிளைகளிலும் சங்கக் கட்டடம் கட்ட முடியும். சுமார் 15 உறுப்பினர்களை மட்டுமே கொண்டு செயல்படும் விருதுநகர் கிளையின் சாதனையை மனதில் வைத்து அனைத்து கிளைகளிலும் சங்கக்கட்டடம் கட்ட அந்தந்த கிளை உறுப்பினர்கள் முயற்சி எடுக்க வேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன்.

**அன்புடன்,**
**சு.பவுன்ராஜன்,**
**முன்னாள் மாநிலத் தலைவர்.**